# பழந்தமிழர் வாழ்வில் காதல்

பாவலர்மணி ஆ.பழநி

## முன்னுரை

காதல் என்பது ஓர் உணர்வு; அஃதோர் இயல்பூக்கம். இனப் பெருக்கத்திற்கு இயற்கை அளித்த கொடை. கவலையும் துன்பமும் கவ்விப்பிடிக்கும் நேரங்களில் அவற்றைச் சிறிது நேரம் மறக்கடிக்கும் புதுவகை அபினி. கருவிலிருந்தே உடன்வந்து, ஒரு காலம் வரை உறங்கிக் கிடந்து இளமைப் பருவத்தில் கட்டவிழ்த்துக் கொண்டு அட்டகாசம் புரியும் ஓர் அழகிய பூதம். இப்பூதத்தை யார் அடக்கியாள வல்லவர்களோ அவர்களே காதலில் வென்றவர்கள். பூதம் தன்னை அடக்கியாளுமாறு பணிந்தவர்கள் காதலில் தோற்றவர்கள் மட்டு மல்லர்; வாழ்க்கையிலும் தோற்றவர்களேயாவர்.

இரண்டு உயிர்களின் தனிப்பட்ட உறவாகத் தொடங்குகின்ற காதல் இணங்கியும் பிணங்கியும் வளர்ந்து சென்று கற்பிலே (குடும்ப வாழ்வில்) கனிகின்றது. அக்கற்பும் குடும்ப வாழ்வாக நெகிழ்கிறது. அதுவே மேலும் வளர்ந்து சமூக உறவாக மலர்ந்து உலக சமூகத்தின் சிறிய அலகாகத் (Unit) தன்னை நிலைப்படுத்திக் கொள்கிறது. ஆகக் காதல் என்பது தனித்த உணர்ச்சியே என்றாலும் அவ்வுணர்வுதான் மனிதனைப் பொதுமைக்குள் புகுந்து செல்லப் பாதைபோட்டுக் கொடுக்கிறது என்பது கவனத்திற் கொள்ள வேண்டிய கருத்து. ஒரு தனி மனிதனை சமூக மனிதனாக எவ்வாறு உருமாற்றம் கொள்ள வைக்கின்றது இந்தக் காதல் என்பதை ஏரண முறையில் எண்ணிப் பார்ப்பது ஒரு வரலாற்றுக் கண்ணோட்டமாகும். இக்கண்ணோட்டந் தான் காதலின் முழுப்பரிமாணத்தையும் நமக்குக் காட்டவல்லது.

ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே நிகழும் உளம் சார்ந்த-உடல் சார்ந்த உறவைக் காதல் என்று இன்று குறிப்பிடுகின்றனர்.

ஆனால் பழங்காலத்தில் காமம் என்ற சொல்தான் பெரும்பாலும் ஆளப்பட்டது. 'காமம் செப்பாது கண்டது மொழிமோ' என்றாற் போல விருப்பம் என்ற பொருளில் சில போது ஆளப்பட்டதும் உண்டுதான்; என்றாலும் உடல்சார்ந்த உறவைக் குறிக்கப் பெரும்பாலும் 'காமம்' என்ற சொல்தான் ஏற்புடையதாகக் கொள்ளப்பட்டது. ஆனால் காலப் போக்கில் இக்காமம் என்ற சொல் 'வரன்முறையற்ற உடற்பசி' என்று பொருள்கொள்ளப்பட்டு இழிந்தபொருள் அதன் மீது ஏற்றப்பட்ட போதுதான் காதல் என்ற சொல் காமத்தின் இடத்தைப் பிடித்துக் கொண்டது. இதனால்தான் காமத்துப்பால் இன்பத்துப் பாலாக இடமாற்றம் பெற்றது.

கமம் என்ற சொல்தான் முதனிலை நீண்டு காமம் என்றாகியது என்பர். கமம் என்றால் என்ன பொருள்? நிறைவு என்பதுதான் அதன் பொருள். 'கமம் நிறைந்தியலும்' என்பான் தொல்காப்பியன். இக்கமம் என்ற சொல்லுக்கு வேளாண்மை என்று இன்னொரு பொருளும் உண்டு. இன்றும் கூட ஈழ நாட்டில் வேளாண்மையைக் கமத்தொழில் என்றுதான் கூறுகின்றனர். மனம், உடல் இரண்டிற்கும் நிறைவைத்தரவல்லது காமம். தொழில்களுக்குள்ளே நிறைவான தொழில் கமம் (வேளாண்மை).

## குடற்பசியும் உடற்பசியும்

மனிதனை இரண்டு பசிகள்தாம் பிடித்து ஆட்டுகின்றன. ஒன்று குடற்பசி, மற்றொன்று உடற்பசி. இரண்டு பசிகளும் நிறைவு பெறுகின்றபோது வாழ்வே நிறைவுபெற்றுவிடுகிறது. சிறையிலே வதிபவர்களைக் கண்டு உசாவுவீர்களேயானால் பெரும்பாலும் இவ்விரண்டு பசியில் ஏதேனும் ஒரு பசியால்தான் சிறைக்குள்ளே வர நேர்ந்தது என்பதை அறிவீர்கள். உலகின் பெரும்பாலான குற்றச் செயல்களுக்கு இப்பசிகள்தான் காரணம் என்பதை ஆய்வாளர்கள் வெளிப்படுத்துகின்றனர். கமம், காமம் என்ற இரண்டின் நிறை வின்மை குற்றச்செயல்களை அதிகமாக்குகின்றது. இவ்விரண்டின் நிறைவு குற்றங்களைத் தடுத்து வாழ்க்கையை நிறைவுடைய தாக்குகிறது. இதனால்தான் பழந்தமிழர் கமம் என்ற சொல்லிருந்து காமம் என்ற சொல்லை உருவாக்கினர். இந்த உண்மையை அறியாதவர்கள் காமத்தைப் புறக்கணித்துக் காதலை முன்னிறுத்தினர் போலும். 'மலரினும் மெல்லிது காமம்' என்றாரே திருவள்ளுவர்.



அந்தக் காமத்தையா 'வரன்முறையற்ற உடற்பசி' என்று கொச்சைப் படுத்துவது.

## புறநானூற்றிலே ஒரு பாடல்

வள்ளல் ஆய்அண்டிரனை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியதாகக் காணப்படுகின்றது. பாடல் எண் 132.

"முன்னுள்ளு வோனைப் பின்னுள்ளி னேனே
ஆழ்க என் உள்ளம்; போழ்களன் நாவே!
பாழூர்க் கிணற்றின் தூர்களன் செவியே
நரந்தை நறும்புல் மேய்ந்த கவரி
குவளைப் பைஞ்சுனை பருகி, அயல
தகரத் தண்நிழல் பிணையொடு வதியும்
வடதிசை அதுவே வான்தோய் இமயம்
தென்திசை ஆஅய் குடி யின் றாயின்
பிறழ்வது மன்னோஇம் மலர்தலை உலகே"

இமயமலையின் மீது வாழ்கின்ற கவரிமா என்ற விலங்கு நரந்தை என்ற நறும்புல்லை வயிறார மேய்கிறது; பின்னர்க் குவளை பூத்துள்ள சுனையில் நீரைப் பருகுகின்றது. பின்னர் தன் காதலுக்குரிய பிணையோடு (பெண் விலங்கோடு) தகர மரத்தின் இனிய நிழலில் தங்கியிருக்கின்றது என்கிறார் முடமோசியார். இத்தகைய இனிய சூழல் நிரம்பிய இமயத்திற்கு நிகராகத் தெற்கில் ஆய்மன்னனும் அவன் குடியும் இருப்பதனால்தான் உலகம் சமமாக இருக்கின்றது; இல்லையேல் உலகம் புரண்டு போய்விடும் என்கிறார் புலவர்.

வடக்கே இமயமலையில் என்ன நிகழ்கிறது என்பதைச் சொன்ன புலவர் தெற்கே ஆய்குடியில் என்ன நிகழ்கிறது என்பதைச் சொல்ல வில்லை. ஆயினும் இரண்டும் சமம் என்று சொல்வதனால் வடக்கே உள்ள நிகழ்வுதான் தெற்கிலும் நிகழ்கிறது என்பதை உய்த்துணர வைக்கிறார் புலவர். வடக்கே என்ன நிகழ்கிறது? கவரிமான் நரந்தம்புல், சுனைநீர் இவற்றால் தன் குடற்பசியைப் போக்கிக் கொண்டு தன் பிணையோடு கூடி உடற்பசியையும் போக்கிக் கொண்டு இரண்டு பசியும் நீங்கிய நிலையில் தகர மரத்தின் இனிய நிழலில் அமைதியாகத் தங்கியுள்ளது. இதுபோலவே தெற்கில் ஆய் குடியில் உள்ள மக்கள் குடற்பசியும் உடற்பசியும் நீங்கி

ஆய்அண்டிரனின் செங்கோல் நிழலில் அமைதியாக உள்ளனர் என்பதை உய்த்துணர வைக்கின்றார். இதனால் வடக்கே உள்ள இமயத்திற்கு நிகராகத் தெற்கே உள்ள ஆய்குடி விளங்குவதனால் உலகம் பிறழ்ந்துபோகாமல் நிலைபெற்றுள்ளது என்கின்றார். வடக்கே விலங்கின் வாழ்க்கை எப்படி உள்ளது என்றவர் தெற்கில் மனிதர்களின் வாழ்க்கை எப்படி உள்ளது என்பதை உய்த்துணர வைக்கின்றார்.

விலங்குகள் தழையை உண்டு நீரைப் பருகிப் பிணையைக் கூடி நிறைவடைகின்றன. தெற்கில் மக்கள் கமத்தொழில் புரிந்து, குடற்பசி போக்கி, இணையைக் கூடி உடற்பசி நீங்குகின்றனர் என்பதை மிக அழகாக எடுத்துக்காட்டுகின்றார். இதிலிருந்து காதல் என்ற சொல் முன்னிறுத்தப்பட்டாலும் காமம் என்ற சொல்தான் பொருட் சிறப்பானது என்பதை அறிந்துகொள்கிறோம்.

காதல் படுத்தும் பாடு

காதலின் தொடக்கம் இனிமையாகத்தான் இருக்கிறது. காதலுக்கு உறவு, சுற்றம் தேவையில்லை. ஏழை, செல்வன் என்ற வேறுபாடுகள் இல்லை. கண்கள் எப்படியோ பார்த்துக் கொள்கின்றன. ஏதோ ஒரு இரசாயன மாற்றம் உடலில் எப்படியோ நிகழ்ந்து விடுகின்றது. தன்வயமில்லாமலேயே இதழ்கள் புன்னகை புரிகின்றன. எங்கோ பார்ப்பதுபோலக் கண்கள் அலைந்தாலும் மீண்டும் ஓரிடத்தையே நோக்கித் திரும்புகின்றன. நெஞ்சங்களின் இடமாற்றம் ஓசையின்றி நடைபெற்று விடுகின்றது. இதோ குறுந்தொகையில் ஒரு காதல்காட்சி:

'யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே'

பார்வை மழையில் நனைந்த காதலர்களின் நிலை எவ்வாறு இருக்கும் என்பதைப் புலவன் அருமையாக எடுத்துக் காட்டுகின்றான். மழை எங்கிருந்தோ வருகின்றது. பெய்யத் தொடங்குகின்றது. எங்கே? செம்மண் நிலத்தில். உயரத்தில் இருந்த மேகமும் கீழே கிடந்த



நிலமும் பார்த்துக்கொண்ட பார்வையில் காதல் பிறந்து விடுகிறது. உயரத்தை உதறி எறிந்துவிட்டு மழை கீழே இறங்கி வருகிறது. வலிமையான செம்மண் நிலம் தன் வலிமையை உதறிவிட்டு மழையை எதிர்கொள்கிறது. நிலம் மழையை உள்வாங்கித் தன் வன்மையை இழந்து மென்மை பெறுகிறது. மழையோ தன் மென்மையை இழந்து நிலத்தின் வன்மையையும் செந்நிறத்தையும் வாங்கிக்கொள்கிறது. நிலத்திற்குள் நீர் குடியேறுகிறது. நீருக்குள் நிலம் ஊடுருவுகிறது. உவமையைக் கொண்டே ஓர் ஊமைக்காதல் நாடகத்தைப் புலவன் அரங்கேற்றம் செய்யும் அழகு சொல்லி முடியாது. இங்கு இன்னொரு அழகு என்னவென்றால் இப்பாடலின் இறுதி அடிதான். புலவன் இயல்பாக இப்பாடலை முடிக்க வேண்டுமானால் 'அன்புடை நெஞ்சேம் யாங்கலந்தனமே' என்று தான் முடிக்க வேண்டும். ஆனால் புலவன் அப்படி முடிக்கவில்லை. இப்படி முடித்தால் எம் அறிவின் வழியேதான் இக்காதல் நிகழ்வுகள் நடந்தன என்றாகிவிடும். யாம் பார்த்தேம், யாம் கலந்தேம் என்று எல்லா நிகழ்வுகளும் எம் அறிவின் வழிகாட்டலால்தான் நடந்தன என்று பொருள்பட்டு விடும்.

இப்படிச்சொல்லப் புலவனுக்கு விருப்பமில்லை. ஏன் விருப்ப மில்லை? காதல் நிகழ்வுகளில் அறிவின் பங்களிப்பு மிகவும் குறைவு தான். ஏனைய நிகழ்வுகளில் அறிவின் பங்களிப்பு மிகுதியாகவும் உணர்ச்சியின் பங்களிப்பு குறைவாகவும் இருக்கும். ஆனால் காதலில் உணர்ச்சியின் பங்களிப்பு மிகுதியாகவும் அறிவின் பங்களிப்பு குறைவாகவும்தாம் இருக்கும் என்பதை வெளிப்படுத்த விரும்புகிறான் புலவன். அதனால் எம் அறிவு ஏவியபடி நெஞ்சங்கள் கலந்தன என்று கூறாமல் எம் அறிவு புறத்தே கிடக்க நெஞ்சங்கள் தாமாகவே அறிவின் துணையின்றிக் கலந்தன என்று கூறுகின்றான். காதலில் முதற்சந்திப்பு ஒரு மாயாசாலம்போல்தான் இருக்கும் என்றும் இதில் அறிவின் பங்களிப்பு மிகுதியாக இராது என்றும் தெளிவாகவே இப்பாடல் எடுத்துக்காட்டுகின்றது.

தமிழில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று திணைகளை வகுத்து இவற்றிற்கான உரிப்பொருள் விளக்கம் கொடுத்த அறிஞர்களின் மெய்யியல் அறிவு நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. காதல் என்பது இன்பமயமானது என்ற கற்பனையைத் தூள்தூளாக்குகிறது. காதலில் இன்பம் என்பது பாலைவனப்

பாதையில் எப்பொழுதோ தட்டுப்படும் ஈச்சமரப்பசுந்சோலை தானே தவிர முல்லை நிலக்காடு அன்று.

*குறிஞ்சி :* புணர்தலும் புணர்தல் நிமித்தமும் - இதில் புணர்தல் ஒன்றுதான் இன்பமானது. புணர்தல் நிமித்தமான நிகழ்வுகள் துன்பமானவைதாம்.

*முல்லை :* இருத்தலும் இருத்தல் நிமித்தமும் ஆகும். காதலர் பிரிந்த காலத்தில் ஆற்றியிருக்கும் இருவர் மனநிலையும் அது தொடர்பான நிகழ்வுகளும் துன்பமானவையே.

*மருதம் :* ஊடலும் ஊடல் நிமித்தமும் ஆகும். ஊடல் என்பதே பிரிவில்தான் நிகழும். ஆகையால் ஊடலும் அது தொடர்பான நிகழ்வுகளும் துன்பமானவையே.

*நெய்தல் :* இரங்கலும் இரங்கல் நிமித்தமும் ஆகும். பொழுது கண்டு இரங்குதலாகிய நிகழ்ச்சியும் பிரிவில் நிகழ்வது ஆதலின் இவையும் துன்பமானவையே.

*பாலை :* 'போக்கெல்லாம் பாலை' என்பது இலக்கணம். சிறு பிரிவு முதல் பெரும் பிரிவு (சாவு) வரை உள்ள அனைத்தும் பாலைத் திணையே என்பதனால் இத்திணை நிகழ்ச்சிகளும் துன்பமானவையே.

ஒவ்வொரு திணையும் இரண்டு கூறுகளைக் கொண்டுள்ளன. ஐந்து திணைகளும் மொத்தம் பத்துக் கூறுகளைக் கொண்டுள்ளன. இவற்றுள் குறிஞ்சித் திணையில் புணர்தல் மட்டுமே இன்பமானது. ஏனைய நான்கு திணைகளும் அவற்றின் நிமித்தமாகிய நான்கும் குறிஞ்சித் திணையின் நிமித்தமாகிய ஒன்றும் ஆக ஒன்பது கூறுகள் துன்பத்தையே தருகின்றன. இதனால் உணர்த்தப்படும் செய்தி என்ன? வாழ்க்கை மொத்தமும் கணக்கிட்டுப் பார்த்தால் பத்தில் ஒரு கூறுதான் மகிழ்ச்சி. ஏனைய ஒன்பது கூறுகள் துன்பமே என்ற மெய்யியல் உண்மையல்லவா?

இனி, காதல் மயக்கத்தினால் எழுந்த கலக்கம் எத்தகையது என்பதையும் அவ்வின்ப மயக்கத்தால் எதிர்கொள்ள நேர்ந்த துன்பச் சுமைகளையும் சிறிது காண்போம்.



இரவிலே தன் காதலியைச் சந்திக்க வருகின்றான் காதலன். அவன் அவள் வீட்டுக் கதவைத் திறக்க முடியுமா என்று முயல்கிறான். உள்ளே உறங்குவது போல நடித்துக்கொண்டிருந்த தலைவியை அவள் தாய் தன் கையால் அணைத்துக் கொண்டு உறங்குகின்றாள். தலைவி தன் தாயின் கையை விலக்க முற்படும் போதெல்லாம் தாயின் கை மேலும் வலுவாக இறுக்குகின்றது. தலைவனோ வீட்டுக்கதவிலே முட்டிக்கொண்டு நிற்கின்றான். தாயோ மகளைக் கட்டிக்கொண்டு விடமாட்டேன் என்கிறாள். இந்த நாடகம் விடியும் வரை தொடர்கின்றது. பாவம் காதலர்கள். *(குறுந்தொகை 244).*

ஊரே உறங்குகின்றது. ஆனால் ஒருத்தி மட்டும் உறங்கவில்லை. எப்படி வரும் உறக்கம்? காதல் கனல் கண்ணில் மட்டுமா? உடலையே பற்றி எரிக்கின்றதே. உறங்கிக் கொண்டிருக்கும் ஊரார் மேல் அவள் கோபம் பாய்கிறது. நான் நிம்மதியில்லாமல் இருக்க இவர்கள் நிம்மதியாக உறங்குவதா? "தோழி! என் துன்பத்தை உணராமல் தூங்கும் இவர்கள் மேற்சென்று முட்டட்டுமா? தாக்கட்டுமா? ஆ! ஒல்! என்று வாய்விட்டுக் கூச்சல் எழுப்பட்டுமா?". *(குறுந்தொகை 28)*

"தோழி புறப்படு. அன்னையின் கட்டுக்காவலையும் மீறி இல்லத்தைக் கடப்போம். ஊர்ப் பொதுமன்றத்தையும் தாண்டிச் செல்வோம். இப்பகற்பொழுதில் பலரும் காணுமாறு மறைவாக அன்று, வெளிப்படையாகவே விசாரிப்போம்; நம் தலைவனின் ஊர் எது என்று. எதற்காகச் செல்வது என்று கேட்கிறாயா? வாய்மொழி தவறிய அந்த மனிதனை நோக்கி நீ சான்றோன் அல்லன் என்று இரண்டு சொற்களைக் கூறிவிட்டு வரத்தான்". *(நற்றிணை 365)*

கொஞ்ச நாட்களாகக் காதலன் காதலியைப் பார்க்க வரவில்லை. தலைவி தோழியை நோக்கிக் கேட்டாள். "என்னடி இது வியப்பாக உள்ளது. தலைவனைக் காணவே முடியவில்லை. ஆள் இருக்கின்றானா? இல்லையா என்ற ஐயமல்லவா தோன்றுகின்றது" என்ற புலம்ப அவள் தோழி கூறுகின்றாள்: "தலைவியே! நீ கவலைப் படாதே, இவன் எங்குப் போய்விட முடியும்? இந்த நிலத்தைத் தோண்டிக்கொண்டு பூமிக்குள் போயிருக்க முடியாது. இவன் வானத்தின் மீதும் ஏறிப்போயிருக்க முடியாது. ஏனெனில் அதற்கு

யாரும் ஒரு ஏணி செய்து வைக்கவில்லை. இவனுக்குள்ள இரண்டு கால்களால் கடலிலும் நடந்து செல்ல முடியாது. ஆகவே ஆள் இங்கேதான் உள்ளான். நாடுகள்தோறும் ஊர்கள்தோறும் வீடுகள் தோறும் புகுந்து தேடுவோமேயானால் எப்படியும் அவன் அகப்பட்டு விடுவான்" என்று சுற்றுப்பயண ஏற்பாட்டிற்குத் திட்டம் தருகிறாள் ஒரு தோழி. *(குறுந்தொகை 130)*

இன்னொருத்தியின் புலம்பல் நம் இதயத்தைப் பிழிகிறது. "நெஞ்சே! நீ விரும்புகிற பொழுதெல்லாம் அவன் இருக்கும் இடத்திற்குச் சென்று விடுகின்றாய். ஆனால் இந்தக் கண்கள் இருக்கின்றனவே, அவை அவனை எனக்குக் காட்டு, காட்டு என்று என்னைப் பிய்த்துத் தின்னுகின்றன. நெஞ்சே நீ மீண்டும் செல்லும் போது இந்தக் கண்களையும் அழைத்துக் கொண்டு போய்விடு". *(குறள் 1244)*

இந்தப் பெண்ணிற்கு என்ன நேர்ந்து விட்டது? ஏன் இப்படிச் சிரிக்கின்றாள். முகத்திலே சோகம்! வாயிலே சிரிப்பு. வித்தியாசமாக அல்லவா இவள் தோற்றம் தெரிகின்றது. அது சரி அவள் என்ன பேசுகின்றாள் என்று கேளுங்கள்.

"அந்தக் கல்நெஞ்சக்காரனை எனக்குக் காட்டித் தந்து இப்பிரிவுத் துன்பத்தில் என்னைத் தள்ளியவை இக்கண்கள் தாமே, இன்று அக்கண்களே அவனைக் காணாமையால் அழுது துன்புற நேர்ந்தது எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது 'ஓ! இது மிகவும் இனியது". *(குறள் 1176)*

"விரும்பி விரும்பி - திரும்பத் திரும்ப அவனை நோக்கி மகிழ்ந்த கண்களே நன்றாக அழுவீர்களாக. துன்புற்றுத் துன்புற்று, அழுது அழுது கண்ணில் உள்ள நீரெல்லாம் அற்றுப்போகும் அளவிற்கு அழுவீர்களாக. இதுவும் வேண்டும் உங்களுக்கு இன்னமும் வேண்டும்". *(குறள் 1174)*

காதல் என்பது ஒரு கனவு - மயக்கம் - களிப்பு என்பதெல்லாம் இந்தப் பெண்ணின் கண்ணீரில் கரைந்து போவதைப் பார்க்கின்றோம். காதல் என்பது இத்துணைக் கொடியதா? வேதனைக்கு இன்னொரு பெயர்தான் காதலா? ஆம் வேதனைதான்; ஆனால் அது இன்ப வேதனை.



காதலில் பெண்கள்தாம் அதிகத் துன்பத்தை அனுபவிக் கின்றார்களா? ஆண்களின் நிலைமை எப்படி? அவர்கள் துன்பத்தை அனுபவிப்பது இல்லையா? - அவர்களுடைய புலம்பல் இன்னும் அதிகமாகவே இருக்கின்றது.

ஒரு தலைவன் தன் காதலைத் தலைவியிடம் எடுத்துக்கூறி அவளும் அதற்கு இணங்க அவளைக் கூடிக்கலந்து திரும்பி வருகின்றான். வருகின்றவனை நாம் வழி மறிக்கின்றோம். "தலைவனே! உன் காதலைப் பற்றிக் கொஞ்சம் கூறுவாயா?" என்று கேட்கின்றோம் அவனோ மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டோட உற்சாகமாக உரையைத் தொடங்குகின்றான்.

"கடலாற் சூழப்பட்ட இந்த நிலவுலகத்தையும் அரிதாகப் பெறக்கூடியதாகிய புத்தேளிர் நாட்டையும் தராசின் ஒரு தட்டில் இட்டு, மற்றொரு தட்டில் பூப்போன்ற மையுண்ட கண்களையும் பொன்போன்ற மேனியையும் உடைய என் காதலியின் தோளில் சாய்ந்து நான் பெற்ற இன்பத்தையும் வைத்தால் எத்தட்டுத் தாழ்ந்திருக்கும் தெரியுமா? யான் என் காதலியோடு பெற்ற இன்பத்தை வைத்த தட்டுத்தான். யான் பெற்ற இன்பத்திற்கு எதுவும் நிகரில்லை" என்கிறான் இத்தலைவன். *(குறுந்தொகை 101)*

"இந்த இன்பம் எல்லா நாளும் கிடைக்குமா? மீண்டும் ஒரு நாள் அத்தலைவனை நாம் சந்தித்து உன் காதலைப்பற்றிக் கூறு என்றால் அவன் பதில் முன்னர்க் கூறியது போல இல்லை. சிறுகுடிக் குறவனின் பெருந்தோள் குறுமகளாகிய தலைவி நீர் போன்ற சாயலை உடையவளாக இருக்கின்றாள். தீயைப் போன்ற என் வலிமையை எல்லாம் அந்நீர் இன்று அவித்துவிட்டதே" என்று புலம்பத் தொடங்குகின்றான். *(குறுந்தொகை 95)*

"வறியன் இன்பத்தை எய்த முடியுமா? இவ்வுண்மையை அறியாத நெஞ்சே! கிடைக்காத பொருள் மீது ஆசைப்பட்டு விட்டாயே. அவள் நல்லவள் என்பதை அறிந்த நீ, கிடைத்தற்கு அரியவள் என்பதை அறியாமல் போய்விட்டாயே." *(குறுந்தொகை 120)*

"ஒரு காலத்தில் நான் நாணமும் நல்ல ஆண்மையும் உடையவனாக அல்லவா விளங்கினேன். இன்று என் நிலைமை

என்ன? அவளை அடைவதற்காக நாணத்தையும் ஆண்மையையும் காற்றிலே பறக்கவிட்டவனாக நடுத்தெருவில் நின்று நான் மடலேறி நிற்க ஊராரெல்லாம் எள்ளி நகையாடும் நிலைக்கு ஆளாகி விட்டேனே." *(குறள் 1133)*

காதல் நிகழ்ச்சிகளைப் பகுத்துப் பார்ப்போமானால் இன்பம் 10 விழுக்காடு, துன்பம் தொண்ணூறு விழுக்காடு என்பது நன்றாகவே வெளிப்படும் என்றபோதிலும் அந்த 10 விழுக்காட்டு இன்பம் தருகின்ற வலிமை தொண்ணூறு விழுக்காட்டுத் துன்பத்தைத் தாங்கிக் கொள்ளும் வலிமையைத் தந்துவிடுகிறது. அதனால்தான் மனிதர்கள் மட்டுமல்லர்; எல்லா உயிரினமும் காதலிலே மூழ்கித் துன்ப முத்துக்களை வாரிக்கொண்டு வருகின்றன. 'கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால் மண்ணிற் குமரர்க்கு மாமலையும் ஓர் கடுகாம்' என்று பாவேந்தன் பாடினான் போலும்.

உடல் சார்ந்த கவர்ச்சியும் மனம் சார்ந்த வளர்ச்சியும்

காதல் என்பது உடல் சார்ந்த கவர்ச்சியில்தான் தொடங்கு கின்றது. நிறமும் தோற்றமும் சாயலும் என இவைதான் கவர்ச்சியின் அடிப்படையாக அமைகின்றன. ஆனால் காலப் போக்கில் இவை கொஞ்சம் கொஞ்சமாகத் தளரும். அதே நேரத்தில் குணமும் நல்லியல்புகளும் வளர்ச்சியை நோக்கி இட்டுச் செலுத்தும். புலன்சார்ந்த வாழ்க்கையை விட மனம் சார்ந்த வாழ்க்கை உயர்தன்மை உடையது என்ற உள்முகப் பார்வை உண்டாகும். அவ்வுள்முகப் பார்வையின் முடிவில் நாம் சந்திப்பது வாழ்க்கையின் நிறைவைத்தான்.

லேஹண்ட் என்ற கவிஞனின் பாடல் இங்கே நோக்கத்தக்கது. ஒரு தலைவனின் காதல் நிறைவேறவில்லை. ஆனால் காலங்களோ கடந்துவிட்டன. கடந்துபோன கால நீட்சியின் சுவடுகள் அத்தலைவன் முகத்திலே தெரிகின்றன. அந்தக் 'காலத்தை' முன்னிறுத்திக்கொண்டு இதோ தலைவன் பேசுகிறான் :

"ஏ! காலமே! அற்பத் திருடனே
மற்றவருடைய ரகசியங்களை எல்லாம்
அறிந்து கொள்வதில் ஆர்வமுடையவன் அல்லவா நீ
இதே இதையும் சேர்த்துக்கொள்



எனக்கு வயதாகிவிட்டது என்று சொல்!
என் முடி வெளுத்துவிட்டது என்று சொல்!
என் முகத்தில் சுருக்கம் விழுந்துவிட்டது என்று சொல்!
ஆனால் அருமை ஜென்னி எனக்கொரு முத்தம் கொடுத்தாள்
என்பதை மறந்துவிடாதே"

கவிஞன் என்ன சொல்கிறான்? முடியிலும் தோலிலும் காலம் தன் அடையாள முத்திரையைப் பதித்துவிட்டது. ஆனால் ஜென்னி கொடுத்த முத்தத்திலும் அதனால் அவனிடம் ஏற்பட்ட மனக் கிளர்ச்சியிலும் காலம் தன் முத்திரையைப் பதிக்க முடியவில்லை. அது என்றும் இளமையாகவே இருக்கின்றது. உடல் காலத்தால் தளரும், ஆனால் மனம் காலத்தால் தளருவது இல்லை. இங்கே உடல்சார்ந்த கவர்ச்சி மனம் சார்ந்த கவர்ச்சியாக மாறிவிட்டதைப் பார்க்கிறோம்.

காண்டேகர் என்ற புதின ஆசிரியர். தன்னுடைய புதினம் ஒன்றில் இவ்வாறு குறிப்பிடுகின்றார். "எந்தப் பெண்ணும் தன் இளமையில் கணவனை இழந்துவிடக் கூடாது; எந்த ஆணும் முதுமையில் தன் மனைவியை இழந்துவிடக் கூடாது."

முதுமையுற்ற ஓர் ஆணுக்கு மனைவியின் உடற்கவர்ச்சி எவ்விதத்திலும் பயன்படப்போவதில்லை. உடற்கவர்ச்சியெல்லாம் இளமைக்குத்தான் தேவை. அவ்வாறானால் முதுமையில் மனைவியை இழந்துவிடக்கூடாது என்றது ஏன்? முதுமை வாழ்க்கை என்பது புலன்களால் வாழும் வாழ்க்கை அன்று; மனத்தினால் வாழும் வாழ்க்கை. இறந்த காலத்தை எண்ணிப் பார்க்க, எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ள மனைவி இன்றியமையாதவளாகின்றாள். ஒருவரை ஒருவர் இன்றியமையாமை என்பது இளமையைவிட முதுமையில் தான் அவசியமாகிறது. வாழ்க்கையின் நிறைவுக்கு இளமை அடித்தளம் அமைக்கின்றது. முதுமை கோபுரம் எழுப்புகின்றது.

பாவேந்தரின் முதியோர் காதலில் மணவழகர் தங்கத்தின் நெஞ்சில் தன்னை இளமைக் காலத்தில் விதைத்து வைத்ததாகவும் அவ்வித்து முளைத்து, வளர்ந்து கிளை பரப்பி நிற்பதாகவும் கூறுகின்றார். அது மட்டுமா? தங்கம் இப்பொழுது எப்படி இருக்கின்றாள்? குமரிப் பெண்ணாகவா? இல்லை. குடுகுடு கிழவியாக. இதோ மணவழகர் கூறுகின்றார்.

"புதுமலர் அல்லள் காய்ந்த
புற்கட்டே அவள்உ டம்பு
சதிராடும் நடையள் அல்லள்
தள்ளாடி விழும்மூ தாட்டி
மதியன்று முகம்அ வட்கு
வறள்நிலம் குழிகள் கண்கள்
எதுவெனக் கின்பம் நல்கும்
'இருக்கின்றாள்' என்ப தொன்றே"

புதுமலராகவும் சதிராடும் நடையளாகவும் மதிபோன்ற முகத்தினள் ஆகவும் தங்கம் விளங்கிய காலத்தில் அவள் உடல் மணவழகருக்கு இன்பம் நல்கியது. இப்பொழுத அவை எல்லாம் அன்று இருந்தது போலவும் இல்லை. இன்பம் தருவதாகவும் இல்லை. எது தனக்கு இன்பம் நல்கும் என்ற கேள்விக்கு 'இருக்கின்றாள் என்பதொன்றே' என்றல்லவா விடை வருகின்றது. ஆம் உடற்கவர்ச்சி மனக் கவர்ச்சியாக மாறிய வரலாற்றைப் பாவேந்தர் அருமையாகப் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

இளமையில் புலன் இன்பம் சிறந்ததா? முதுமையில் பெறும் மன இன்பம் சிறந்ததா? என்ற வினாவிற்கும் பாவேந்தர் பதில் கூறுகின்றார்:

"வாய்மூக்கு கண்காது மெய்வாடி னாலும்
மனைவிக்கும் என்றனுக்கும் மனமுண்டு கண்டீர்
**தூய்மையுறும் அவ்விரண்டு மனம்கொள்ளும் இன்பம்**
**துடுக்குடைய இளையோரும் படைத்திடுதல் இல்லை**
ஓய்வதில்லை மணிச்சிறகு விண்ணேறி நிலவாம்
ஒழுகமிழ்து முழுதுண்டு பழகுதமிழ் பாடிச்
சாய்வின்றிச் சறுக்கின்றி ஒன்றையொன்று பற்றிச்
சலிக்காதின் பங்கொள்ளும் இரண்டுமனப் பறவை"
(குடும்ப விளக்கு, ப.117)

இருவரின் மனப்பறவைகளும் சலிக்காது இன்பங்கொள்கின்றன வாம். அப்பறவைகளின் மணிச்சிறகு ஓய்வதே இல்லையாம். நெடுந் தொலைவு ஆகிவிட்ட, பழைய நிகழ்ச்சிகளாகிவிட்ட நிலவிலிருந்து வெளிப்படுகின்ற இன்ப அமிழ்தை அம்மனப்பறவைகள் சலிக்காமல்



உண்ணுகின்றனவாம். இந்த இன்பத்திற்கு எது நிகர் என்று கேட்கின்றார். துடுக்குடைய இளையோனாக இருந்து தங்கத்தின்பாற் பெற்ற இன்பத்தையும் அவர் அறிந்திருக்கின்றார். புலன்கள் எல்லாம் ஓய்ந்து மனப்பறவைகள் மட்டுமே முழுவீச்சில் இயங்கும் இன்பத்தையும் அவர் கண்டிருக்கின்றார். இளமையில் இந்த இன்பம் (மனப்பறவை இன்பம்) வசப்படுவது இல்லை. முதுமையிலோ அந்த இன்பம் (புலன்சார்ந்த இன்பம்) வாய்த்திடுதல் இல்லை. இரண்டு இன்பத்திலும் முழுமை இன்பம் மன இன்பமே என்பது தெளிவான தீர்ப்புத்தான்.

எழுபது வயதினைத் தாண்டிய கணவன் மனைவியரைத் தனியே சந்தித்து அடுத்த பிறவியிலும் இணையராகவே சேர்ந்து வாழ விரும்புகின்றீர்களா என்று வினவினால், "போதும்! போதும்! பட்டதெல்லாம் போதும்!" என்று பதறுகின்றவர்கள்தாம் மிகுதியாக இருப்பர். அடுத்த பிறவியிலும் எங்கள் வாழ்வு தொடரவேண்டும் என்று சொல்பவர்கள் எண்ணிக்கை குறைவாகவே இருக்கும். அவர்கள் தொகை குறைவாக இருந்தாலும் அவர்களே நிறைவான வாழ்க்கை வாழ்ந்தவர்கள். இவர்களில் ஒரு தலைவனையும் ஒரு தலைவியையும் குறுந்தொகை நமக்கு அறிமுகப்படுத்துகின்றது.

"அணிற்பல் லன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கே ழன்ன மாநீர்ச் சேர்ப்ப
இம்மை மாறி மறுமை யாயினும்
நீயாகியர் என் கணவனை
யானா கியர்நின் னெஞ்சுநேர் பவளே" (குறுந்தொகை 49)

"இப்பிறப்பு மாறி வருகின்ற பிறவியிலும் நீயே என் கணவனாக வரவேண்டும். யானே நின் மனைவியாக வேண்டும்" என்று பொருள் கூறுவதுதான் இயல்பானது. இவ்வாறு பொருள்கூறுகின்றபோது ஓர் அன்பு வாழ்க்கையின் வெற்றி நிறைவைக் காண்கின்றோம். ஆனால், இப்பாடலுக்குத் துறை வகுத்தவர்கள் பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகன் பள்ளியிடத்தானாகத் தலைமகள் கூறியது என்று துறை வகுத்துவிட்டனர். இதனால் 'யானாகியர் நின் நெஞ்சு நேர்பவள் என்ற தொடருக்கு' "யான் இப்பொழுது நின் நெஞ்சு நேர்பவளாக இல்லை, இனிவரும் பிறவியிலேனும் உன் நெஞ்சு நேர்பவளாக வேண்டும்" என்று பொருள் கூறி இல்லாத பரத்தையைப் பாட்டுக்குள்

கொண்டுவந்துவிட்டனர். இந்தப்பாடல் தன் பெருமையை இழந்து போய் நிற்கிறது. ஒரு வெற்றி வாழ்க்கை தோல்வி வாழ்க்கையாகச் சித்திரிக்கப்படுகிறது.

தொல்காப்பியர் தலைமகள் கூற்று (பேச்சு) நிகழுமிடங்கள் பலவற்றைக் கூறுகின்றார். அவற்றுள் ஓர் இடம்:

> 'அருள்முந் துறுத்த அன்புபொதி கிளவி
> பொருள்பட மொழிதல் கிழவோட் குறித்தே' (தொல்.கற்பு 159)

அருளை வெளிப்படுத்தும் அன்பார்ந்த சொற்களைக் கூற வேண்டிய வேளை வந்தபோதுதான் இக்குறுந்தொகைத் தலைவி "இம்மை மாறி மறுமை வரினும் நீ என் கணவன் ஆகுக, யான் நின் மனைவியாகுக" என்று கூறுகின்றாள். இவ்வாறு பொருள் கொள்ள இப்பாட்டும் இடம் தருகின்றது. இப்பாட்டை அதனுள் அடக்கிக்கூற அச்சூத்திரமும் இடம் தருகின்றது. இவ்வாறு பழைய துறையைப் புறக்கணித்துப் புதிய துறையைக் கூறும்போது ஒரு நல்ல தலைவனைப் பரத்தை வழிச்சென்றவன் என்ற பழியிலிருந்து மீட்கவும் முடிகின்றது. இதுவரையிலும் தலைவனின் நெஞ்சு நேராதவளாகவே தலைவி இருந்தாள் என்ற குறையையும் அகற்றிவிட முடிகிறது.

### கற்பு நிலை என்று சொல்ல வந்தால் ...

கற்பு என்பது என்ன? கற்பிக்கப்படுவது எதுவோ அது கற்பு எனப்படுகிறது. நாம் விலங்குகளாக விளங்கிய காலத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழ்ந்தது கிடையாது. கிடைத்ததைப் புசித்து, எதிர்ப்பட்டவரைப் புணர்ந்து, தேவை நிறைவேறியதும் திரும்பிப்பாராமல் செல்வதுதான் வாழ்க்கையாக இருந்தது. ஆனால் மனிதனின் அறிவு வளர்ச்சி பெற, வளர்ச்சி பெற - நாகரிகம் பெருகப் பெருக - பண்பாடு கால்கொள்ளக் கால்கொள்ள வாழ்க்கை மிகப் பெரிய மாற்றத்திற்கு உள்ளாகியது. குடும்பமும் தனிச்சொத்து உடைமையும் தோன்றிய பிறகு அச்சொத்துக்களை அடைய வாரிசுகள் வந்தனர். வாரிசுகளை வரையறுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில்தான் கற்பு என்ற கருதுகோள் வலிமையுடையதாக நிலைபெற்றது.



கற்பு என்பது பெண்ணுக்கு மட்டும்தானா? ஆணுக்கும் உரியதா? பண்பாட்டு நோக்கில் பார்த்தால் அது இருவருக்குமே உரியதுதான். ஆணாதிக்கச் சிந்தனையும் வேறு சில சமூக நெருக்கடிகளும் ஆணுக்குக் கற்பு அவசியமில்லை என்று ஆக்கிவிட்டன. அவசியமில்லை என்று விதிவிலக்கு அளிக்கப்பட்டாலும் கூட எல்லா ஆடவர்களும் கற்பிலிகளாக இருந்தனர் என்று கூற முடியவில்லை. கற்பிற்சிறந்த ஆடவர்களையும் இலக்கியம் நமக்கு எடுத்துக் காட்டிக் கொண்டுதான் இருக்கின்றது.

### பெருங்கோப் பெண்டும் பூதப்பாண்டியனும்

பூதப்பாண்டியன் போரிலே மாண்டு போகின்றான். அவன் முதிய வயதினன் அல்லன்; இளைஞன் தான். இவன் இளைஞன் என்றால் இவன் மனைவி பெருங்கோப் பெண்டும் இளையளாகத் தானே இருக்க வேண்டும். பிரிவுத் தீயின் வெப்பத்தைத் தாங்க மாட்டாதவளாகி அவள் பெருந்தீ வளர்த்து அதனுள் இறங்கி உயிர்விட எண்ணுகிறாள். நெருப்பு மூட்டப்பட்டுவிட்டது. அவளும் நீராடி நெருப்பிலே இறங்க வருகின்றாள். அப்பொழுது அந்நாட்டில் உள்ள சான்றோர்கள் திரண்டு வந்து 'இது முறையன்று' என்று கூறித் தடுக்கின்றனர்.

பெருங்கோப் பெண்டு சொல்கின்றாள்:

"சான்றோர்களே எனக்கும் என் கணவனுக்கும் இருந்த அன்பின் பெருக்கை அறிந்த நீங்களே இப்படித் தடுக்கலாமா?

நெருப்பிலே இறங்கி உன் கணவனைச் சென்று சேர் என்றல்லவா கூறியிருக்கவேண்டும்; மாறாகத் தடுக்கின்றீர்களே, இது நியாயமா? உப்பில்லாத பண்டத்தை வேளைக்கீரையோடு உண்டு பரற்கற்கள் நிறைந்த படுக்கையில் பாயில்லாமலேயே உறங்கி உயிர் வாழும் உயவல் பெண் அல்லேன் யான்.

சான்றோர்களே, இதோ எரிகின்றதே இந்த நெருப்பு, இது உங்களுக்குத்தான் சுடும். என்னை அது சுடாது. இதை விடப் பெரிய நெருப்பு என்னைச் சுட்டுக்கொண்டிருக்கின்றது. ஐயா, சுட்டுக் கொண்டிருக்கின்றது. அவனைக் கண்ட கண்கள் இன்று காணாமையால் என்னைச் சுடுகின்றன. அவன் சொற்களைக் கேட்ட காதுகள்

இன்று கேட்கமுடியாமையால் சுடுகின்றன. அவனைத் தழுவிய மேனி அவனால் தழுவப்படாமையால் பற்றி எரிந்து கொண்டிருக்கின்றது. அவனொடு கூடி வாழ்ந்த நாளின் நினைவுகள் எண்ணுந்தொறும் என் நெஞ்சைச்சுடுகின்றன. என்னை உள்ளும் புறமும் எரித்துக் கொண்டிருக்கும் இந்த நெருப்பை விடவா, இதோ இந்த நெருப்புச் சுடும் என்று அஞ்சுகிறீர்கள். என்னைப்பொருத்த வரையில் இந்த நெருப்பில் இறங்குவதும் தாமரை பூத்த தடாகத்தினுள் இறங்குவதும் ஒன்றுதான்" என்று உறுதியாகக் கூறி விடுகின்றாள்.

இவ்வளவு உறுதியாகப் பேசும் இவளுடைய கணவன் எப்படிப் பட்டவன்? இவளுடைய இந்தத் தியாகத்திற்கு அவன் தகுதி யுடையவன்தானா? அவன் செத்தால் இவளும் சாகவேண்டும் என்று எண்ணுமளவிற்கு அவன் மேலான குணச்சிறப்புடையவனா? ஆம். இதற்கெல்லாம் அவன் முற்றிலும் தகுதியுடையவன்தான்.

பகைவேந்தர்கள் பூதப்பாண்டியன் மேல் படையெடுத்து வருகின்றனர். அப்பொழுது பூதப்பாண்டியன் ஒரு வஞ்சினமொழி கூறுகின்றான் :

"மடங்கலின் சினைஇ மடங்கா உள்ளமொடு
அடங்காத் தானை வேந்தர் உடங்கு இயைந்து
என்னொடு பொருதும் என்ப அவரை
ஆர் அமர் அலறத் தாக்கித் தேரொடு
அவர்ப்புறம் காணேன் ஆயின் சிறந்த
பேரமர் உண்கண் இவளினும் பிரிக" (புறம் 71)

"சிங்கம்போற் சினம் கொண்டும் தாழாத ஊக்கத்தோடும் பெரும் படை கொண்ட அரசர்கள் ஒன்றுகூடி என்னொடு போர் செய்ய வந்துள்ளார்கள். இப்பகைவர்களைப் போர்க்களத்தில் அலறிச் செல்லுமாறு தாக்கிப் புறங்காட்டி ஓடச் செய்யேன் ஆயின் சிறந்தவளாகிய இவளைப் (பெருங்கோப் பெண்டு) பிரிகின்ற பெருந் துன்பத்திற்கு ஆளாவேனாக." இவ்வாறு வஞ்சினம் கூறுகின்றான் பூதப்பாண்டியன்.

ஒருவன் வஞ்சினம் கூறும்போது தன்னால் மதிக்கப்படுகிற - இழப்பதற்கு ஒருப்படாத ஒன்றைத்தான் வஞ்சினப் பொருளாகக் கூறவேண்டும். இங்கே பூதப்பாண்டியன் இழப்பதற்கு ஒருப்படாத ஒன்றாக யாரைக்கருதுகின்றான்? மனைவியைத்தான்; அது மட்டுமா? 'சிறந்த இவள்' என்ற அடைமொழியே அவர்கட்கிடையே இருந்த நெருக்கத்தை வெளிப்படுத்திவிடுகிறது.



அவளுடைய கண்களைப் 'பேரமர் உண்கண்' என்கிறான் பூதப் பாண்டியன். இதற்கு என்ன பொருள்? போரிடுகின்ற பெரிய மையுண்ட கண்கள் என்பதுதான். ஒரு போர்ச்சூழலில் வஞ்சினம் சொல்லும் வேளையில் அவளுடைய போரிடும் கண்கள்தாம் அவனுக்குக்கண் முன் தோன்றுகின்றன போலும். அந்தக் கண்கள் தாமே போர்க்களத்தில் அவன் பகைவர்களைச் சந்திக்கின்ற வேளையில், 'உம்! போரிடு! போரிடு!' என்று ஊக்கப்படுத்தப் போகின்ற கண்கள். இதனால்தான் பேரமர் உண்கண் என்றான் போலும். பூதப்பாண்டியன் போலக் கணவன் அமைந்தால் பெருங்கோப் பெண்டுகள் நெருப்பில் இறங்குவது ஒன்றும் விந்தையில்லையே.

காதல் வாழ்வின் உச்சத்தை - அதன் முழுப்பரிமாணத்தையும் பூதப்பாண்டியன் - பெருங்கோப் பெண்டு வாழ்க்கையில் காணுகிறோம். உண்மைக் காதல் என்பது எவ்வளவு ஆழமானது; எவ்வளவு அகலமானது; எவ்வளவு உயரமானது என்பதை இவர்கள் வாழ்வு நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. 'அரசன் எவ்வழி; குடிகள் அவ்வழி' என்பது ஒரு பழமொழி. அரசனே இத்தகைய அன்பு வாழ்க்கையை வாழ்ந்திருப்பானேயானால் குடிமக்களும் அவனைப் பின்பற்றித்தானே இருக்க வேண்டும். எல்லாரும் பின்பற்றவில்லை என்றாலும் பெருமளவு பின்பற்றித்தானே இருப்பார்கள். ஏதோ பூதப்பாண்டியனும் பெருங்கோப்பெண்டும் தாம் ஓர் எடுத்துக் காட்டானவர்கள் என்று எண்ண வேண்டா. இன்னும் பலர் இருக்கின்றார்கள்; எடுத்துக்காட்டாக.

கணவன் இறந்ததற்காகப் பெருங்கோப் பெண்டு நெருப்பிலே இறங்கினாள். இன்னொரு பாடலில் மனைவி இறந்து விடுகிறாள். கணவன் நெருப்பில் இறங்கவில்லையே தவிர அப்பிரிவுத் துயர் அவனை எப்படி எரித்துச் சிதைத்தது என்பதை அவனே கூறுகின்றான். யார் அவன்? என்கிறீர்களா, இவன் ஒரு சேர மன்னன். 'கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை' என்பது அவனது பெயர். இதோ அவனது கண்ணீர்க் காவியம்.

"யாங்குப்பெரி தாயினும் நோயளவு எனைத்தே
உயிர் செகுக் கல்லா மதுகைத்து அன்மையின்
கள்ளி போகிய களரி மருங்கின்
வெள்ளிடைப் பொத்திய விளைவிறகு ஈமத்து
ஒள்அழல் பள்ளிப் பாயல் சேர்த்தி
ஞாங்கர் மாய்ந்தனள் மடந்தை
இன்னும் வாழ்வல் என்னிதன் பண்பே" (புறம் 245)

"யான் என் மனைவியைப் பிரிந்த துயரம் என்ன அளவினை உடையதாக உள்ளது! அத்துயரம் என் உயிரைப் போக்கும் வலிமையைப் பெறவில்லையே. கள்ளி மரங்கள் வளர்ந்த சுடுகாட்டில் விளைந்த விறகுகளைக் கொண்டு அடுக்கப்பட்ட ஈமத்தில், நெருப்புப் பாயில் என் மனைவியின் உடல் கிடத்தப்பட்டு விட்டது. இவற்றையெல்லாம் கண்ணால் கண்ட நான் இன்னும் உயிரோடு இருக்கின்றேனே; அப்பிரிவுத் துன்பம் என் உயிரை வாங்க வில்லையே; என்னே! நான் அவள்மாட்டுக் கொண்ட காதலின் இயல்பு." மாக்கோதையின் துன்பம் அவர்தம் காதலின் ஆழத்தை நன்கு எடுத்துக்காட்டுகின்றது.

ஒரு பாண்டிய மன்னனையும் சேர மன்னனையும் பார்த்தோம். ஒரு சோழ மன்னனையும் பார்த்துவிடுவோம். இவனும் வஞ்சினம் தான் கூறுகின்றான். "நான் இந்தப் போரிலே வென்றிலேன் ஆயின், என்மேற் காதல் கொள்ளாத - தீமையற்ற குலமகளிரை வலிதிற் கூடிய முயக்கில் என் மாலை சிதைவதாக" என்று கூறும் இவன் கூற்றிலிருந்து இவன் எத்தகைய நெறியான காதல் வாழ்க்கையன் என்பது தெரிகின்றது.

பழந்தமிழகத்தில் மன்னர்கள்தாம் இத்தகு காதல் வாழ்வில் சிறந்திருந்தனர் என்று எண்ணவேண்டா. குடிமக்களும் இத்தகைய காதல் வாழ்வைக் கொண்டிருந்தனர் என்பதையும் புறநானூறு நமக்குக் காட்டுகின்றது.

"இல்லத்தில் வழங்கும் இளைய மயிலாகிய மனைவியைச் சொற்களாகிய வலைகளால் பிணிக்கின்ற ஆற்றல் உடையவனாக விளங்கிய தலைவன் இன்று அவன் மனைவி இறந்து போனதனால் துறவியாகினான்; அவன் அருவியில் குளித்ததனால் நிறம்பெயர்ந்து



போன சடையை உடையவனாய் உணவின் பொருட்டுத் தாளி இலைகளைக் கொய்வான்." (புறம் 252)

ஒருவரை ஒருவர் இன்றியமையாமை என்பதுதான் ஆழ்ந்த காதலின் அடையாளம் என்பதைக் கண்டோம். இது குடிமக்கள் வாழ்க்கையிலும் இருந்தது; முடிமன்னர் வாழ்க்கையிலும் இருந்தது என்பதையும் கண்டோம். இங்கே இதனோடு தொடர்புடைய ஒன்றினை நினைவிற் கொள்ள வேண்டும்.

பெருங்கோப் பெண்டு தீயில் இறங்கினாள் என்பது கொண்டு உடன்கட்டை ஏறும் வழக்கம் பழங்காலத்தில் இருந்தது என்று தவறாக எண்ண வேண்டா. அவள் நெருப்பில் இறங்கியபோது சான்றோர்கள் ஒன்று கூடி என்ன சொன்னார்கள்? அவர்கள் சொல்லியதைப் பெருங்கோப் பெண்டே சொல்கிறாள்:

"செல்கெனச் சொல்லாது ஒழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே"

செல்கெனச் சொல்லாது என்பதனால் இதற்குச் சான்றோர் உடன்பட வில்லை என்று தெரிகிறது. ஒழிக என விலக்கினார்கள் என்பதனால் உடன்படாததோடு எதிர்க்கவும் செய்திருக்கின்றார்கள் என்றும் தெரிகின்றது. பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான்றோர் என்று எரிச்சலோடு கூறுவதனாலும் பொல்லாச் சூழ்ச்சி உடையவர்கள் என்று பழிப்பதனாலும் தக்க காரணங்கள் காட்டி மறுத்திருக்கின்றார்கள் என்பதும் தெரிகின்றது. மேலும் பெருங்கோப் பெண்டு உடன்கட்டை ஏறவும் இல்லை; பூதப்பாண்டியன் இறந்து சின்னாள் கழித்தே அவள் நெருப்பில் இறங்கினாள் என்பதை நாம் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

## காதலால் விளைந்த கறை

ஆணும் பெண்ணும் இருமனம் ஒன்றியதுதான் வாழ்க்கை. அதுதான் காதல் வாழ்க்கை என்றும் கண்டோம். விருப்பமில்லாத வாழ்க்கை என்பது நெருப்பினுள் உறங்குவது போலத்தான். இத்தகைய நெருப்பிலே உறங்கவேண்டிய வாழ்க்கையும் அக்காலத்தில் பெண்களுக்கு நேர்ந்திருக்கிறது என்பதைப் புறநானூற்றிலுள்ள ஏறத்தாழ 24 பாடல்கள் எடுத்து மொழிகின்றன.

இருமனம் விரும்பினால் திருமணம் என்பது மாறி ஒரு மனம் விரும்பினாலே (ஆடவர் மனம்) போதும், திருமணம் நடக்க வேண்டும் என்ற முரட்டு வாதம் அக்காலத்தில் தலைதூக்கி நின்றிருக்கின்றது. அன்பினால் மணந்துகொண்ட காலம் போய், அதிகாரத்தின் துணைக் கொண்டும் அச்சுறுத்தியும் மணங்கொள்ளும் நிலை இருந்திருக்கின்றது. இதனை மகட்பாற் காஞ்சி, மகள் மறுத்தல் என்ற துறைகளில் அமைந்த பாடல்கள் வெளிச்சம்போட்டுக் காட்டுகின்றன.

பாரிக்கும் மூவேந்தருக்கும் என்ன பகை. மகளை மணஞ்செய்து கொடுக்க மறுத்ததுதான் பகை என்பதனை மகள் மறுத்தல் என்ற துறையும் பாரி மகளிர் பாடிய 'அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்' என்ற பாடலும் குறிப்பாக வெளிப்படுத்துகின்றன. வாள் வலிமை கொண்டு மகளிர் தோள் நலம் நுகர நிகழ்ந்த போர்களின் வரிசைகளைப் புறநானூறு அடுக்கிக் காட்டுகின்றது.

இன்று பெண் பிறந்தால் என்ன செய்கின்றார்கள்? திருமணச் செலவிலேயே குடும்பம் நாசமாகிவிடுமே என்று கவலைப் படுகிறார்கள். அன்று பெண் பிறந்து அவள் அழகாகவும் இருந்து விட்டால் ஊரே கவலைப்படுமாம். ஏன்? 'இவளைத் திருமணம் செய்து கொடு' என்று எந்த அரசனாவது கேட்டுவிட்டால் இவள் தந்தையும் தமையன்மார்களும் ஒப்பிவிட்டால் ஒரு தொல்லையும் இல்லை. இவர்கள் மறுத்துவிடுவார்களேயானால் போர் மூண்டு விடும். போர் மூண்டுவிட்டால் ஊரே நாசமாகிவிடுமே என்று கவலைப்படுவார்களாம். இதோ புறநானூறு புகல்கிறது:

> "நுதிவேல் கொண்டு நுதல்வியர் துடையாக்
> கடிய கூறும் வேந்தே தந்தையும்
> நெடிய அல்லது பணிந்து மொழியலனே;
> இஃது இவர் படிவம் ஆயின் வையெயிற்று
> அரிமதர் மழைக்கண் அம்மா அரிவை
> மரம்படு சிறுதீப் போல
> அணங்கா யினள்தான் பிறந்த ஊர்க்கே" (புறம் 349)

பெண்கேட்டு வந்த வேந்தன் எப்படிப் பேசுகிறான். அன்பாகவா? இல்லை. வேலின் நுனியால் நெற்றிவியர்வையைத் துடைத்துக் கொண்டு கடுமையான குரலில் பேசுகின்றான். பெண்ணைப் பெற்ற



தந்தையும் சூளுரை பேசுபவனாக உள்ளானே அன்றிச் சொந்தம் பாராட்டிப் பணிந்து பேசுபவனாக இல்லை. இதுதான் இவர்கள் நிலை என்றால் கூரிய பற்களையும் குளிர்ந்த கண்களையும் உடைய இந்த மணப்பெண் மரத்திலே வைக்கப்பெற்ற நெருப்பைப் போலத் தான் பிறந்த ஊருக்கே துன்பம் தருபவள் என்கிறான் இப்புலவன்.

அக்கினிக்குஞ்சொன்றை மரப்பொந்திலே வைக்கக் காடே வெந்து தணிந்துவிட்டது என்றானே பாரதி, அதுபோலப் பிறந்த ஊரையே அழித்து முடிக்கப் போகிறாள் இவள் என்று பழியை அப்பெண் தலையில் சுமத்திவிட்டான் புலவன்.

அதிகாரமும் வலிமையும் கொண்ட மனிதர்கள் திமிர்கொண்டு போருக்கு எழுவார்களாம். 'என்னிடம் பெண் கேட்கும் தகுதி உனக்கில்லை' என்று இவர்களும் அதே பாணியில் பதில் சொல்வார்களாம். இறுதியில் போரினால் ஊர் அழிய, அதற்குரிய பழியை மட்டும் இப்பெண் சுமக்க வேண்டுமாம்; இஃது என்ன நீதி என்று நமக்குப் புரியவில்லை.

'மலரினும் மெல்லிது காமம்' என்றான் வள்ளுவன். இந்த மனிதர்களின் செயலைப் பார்த்தால் 'மலையினும் வல்லிது காமம்' என்று கூற வேண்டும்போல் தோன்றுகின்றது.

அன்பும் கனிவும் நெகிழ்வும் காதலை வளர்த்த காலம் கை நழுவிப் போய், வாளும் வேலும் தோள் வலியும் காதலை வணக்கும் கருவிகளாக மாறிப்போனதை இலக்கியம் நமக்கு எடுத்துக் காட்டிக்கொண்டிருக்கின்றது. புகழ் மிகுந்த அப்பழந்தமிழர் வாழ்க்கையில் இப்படி ஓர் கறை படிந்திருக்கக் கூடாதுதான். ஆனால் வரலாறு அப்படியெல்லாம் நாம் விரும்பியபடி நடந்துகொள்வ தில்லையே.

மானுடச் சமூகத்தின் ஒட்டுமொத்த வரலாற்றைக் கூர்ந்து நோக்குவீர்களேயானால் உரூசோவின் பொன்மொழி எத்தகைய பொருள் பொதிந்தது என்று வியப்படைவீர்கள். அப்படி என்னதான் சொன்னான் உரூசோ என்கிறீர்களா?

"ஆடம்பரம் இல்லை என்றால் கலை ஏது? அநியாயக்காரர்கள் இல்லை என்றால் சட்ட விவகாரங்கள் ஏது? கொடுங்கோலர்களும் போர்களும் இல்லை என்றால் வரலாறு ஏது?"

எளிமை தன் எல்லையைக் கடந்துதான் கலையைக் கண்டது. மனிதன் தன் எல்லை மீறலால்தான் சட்டங்களைக் கொண்டு வந்தான். இதே எல்லை மீறலைத்தான் நாம் காதலிலும் பார்க்கின்றோம். பழந்தமிழர்களின் அன்பு வழிப்பட்ட காதல் வாழ்வில் ஏற்பட்ட எல்லை மீறல்களின் எச்சங்களைத்தான் இன்று கற்பழிப்புகளாகவும் கொலைகளாகவும் காணுகின்றோம். அந்த எல்லை மீறல்களை ஏற்படுத்துகிறவர்கள் ஒரு நாகரிக சமூகத்தை அநாகரிக சமூகமாக மாற்றுகின்றோமே என்று கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இன்றைய மனிதர்கள் இந்த எல்லை மீறலை ஒழித்து ஒரு நாகரிக சமூகத்தின் வழித்தோன்றல்கள் நாங்கள் என்று மெய்ப்பிப்பார்களா?

பூதப்பாண்டியன்-பெருங்கோப் பெண்டின் காதல் பச்சை விளக்காகி இன்றும் நமக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கின்றது. மகள் மறுத்தலும் மகட்பாற் காஞ்சியும் சிவப்பு விளக்குகளாக நின்று நம்மை எச்சரிக்கின்றன. இந்த எச்சரிக்கையைப் புரிந்துகொள்ள வேண்டியது அறிவார்ந்த சமுதாயத்தின் தலையாய கடமை.

## புலவியும் புலவி நுணுக்கமும்

எது எளிதில் கிடைக்கின்றதோ அதற்கு மதிப்பிருக்காது. எது அரிதாகக் கிடைக்கின்றதோ, அதற்கு மதிப்பு அதிகமாக இருக்கும். தோண்டுகின்ற இடமெல்லாம் தங்கம் கிடைத்து அரிதாகத்தான் இரும்பு கிடைக்குமென்றால் இரும்பின் விலைதான் மிகுதியாக இருக்கும்; தங்கத்தின் விலை குறைவாகத்தான் இருக்கும். இதுதான் உலகின் இயற்கை.

பொருளாதாரத்தில் 'தேய்ந்து செல் பயன்பாட்டு விதி' என்ற ஒன்றைக் குறிப்பிடுவார்கள். முதல் மாம்பழத்தை நாம் உண்ணுகின்ற போது நமக்கிருந்த ஆர்வமும் உண்ணும் போதும் ஏற்படுகின்ற சுவையும் 2ஆவது மாம்பழத்தை உண்ணும்போது இருப்பதில்லை. 3ஆவது மாம்பழத்தை வேண்டா விருப்பாக உண்போம். 4ஆவது மாம்பழத்தைத் தொடர்ந்து உண்ணும்போது வாந்தியே வந்து விடுகின்றது. உண்ணுதலாகிய பயன்பாட்டில் உள்ள விருப்பம் தேய்ந்துபோவதை நாம் பார்க்கின்றோம். இதே தேய்ந்து செல் பயன் பாட்டுவிதி ஆண், பெண் நுகர்ச்சியிலும் தன் திருவிளையாடலைக் காட்டவே செய்யும். இவ்விதி இடையில் புகுந்துவிடாமல் தடுத்து வாழ்க்கையைப் பாதுகாக்கவே புலவியும் புலவி நுணுக்கமும் அவசியமாகின்றன.



தடைகள் ஏற்படுமானால் அவற்றை உடைத்து முன்னேறவே மனிதன் ஊக்கம் கொள்வான். இஃது உயிர்க் குலத்தின் பொது விதி. 'மடுத்த வாயெல்லாம் பகடன்னான்' என்ற திருக்குறளின் வாயிலாக விலங்குகளுக்கும் அதுதான் பொது விதி என்பதை அறிந்து கொள்கிறோம். எந்த நுகர்ச்சியிலும் உணவாயினும் சரி, காமமாயினும் சரி, இடையீடுகள் வருகின்றபோது அவ்விடை யீடுகளை அப்புறப்படுத்துவதில் நுகர்வோர் கவனம் திரும்பி விடுகின்றது. இடையீட்டை வெற்றிகொள்ள வேண்டும் என்ற ஊக்கமும் இடையீட்டின் கால நீட்சியும் நுகர்ச்சியில் ஏற்பட்ட சலிப்புணர்ச்சியை விரட்டிவிடுகின்றன. ஆற்றல் இழந்த மின்கலம் மின்னூட்டத்தால் வலிமைபெறுவது போல மனித மனமும் புதிய கிளர்ச்சியால் பொங்கி வழியும். மனமாகிய மின் கலத்தைத் தளர்ச்சி யிலிருந்து விடுவித்து, மீண்டும் கிளர்ச்சி பெற வைக்கின்ற மின்சாரம் எது? புலவியும் புலவி நுணுக்கமும் தாம் என்கின்றார் திருவள்ளுவர்.

புலவி என்றால் என்ன? ஆணோ, பெண்ணோ தவறு செய்து விடுவார்களானால் அதன் காரணமாகச் சிறிதளவு கோபம் கொண்டு இன்ப நுகர்ச்சிக்கு இணங்காமல் காலம் கடத்துவது.

புலவி நுணுக்கம் என்றால் என்ன? ஆணோ, பெண்ணோ தவறேதும் செய்யவில்லை என்றாலும் தேய்ந்துசெல் பயன்பாட்டு விதியைப் புறங்காண்பதற்காகப் பொய்யாகச் சினம் காட்டி, ஊடல் கொண்டு இன்ப நுகர்விற்கு இணங்காமல் தடையேற்படுத்துவது.

முதல்நாள் கத்தரிக்காய் சாம்பார், மறுநாள் கத்தரிக்காய் புளிக் குழம்பு, அடுத்த நாள் கத்தரிக்காய் பொறியல், அதற்கடுத்தநாள் கத்தரிக்காய் கூட்டு என்பது சலிப்பேற்படுத்தும் என்பதைத் தெரிந்து கொண்டதனால்தானே ஒவ்வொருநாளும் வெவ்வேறு காய் கறிகளைப் பயன்படுத்துகின்றான். முதல் நாள் பயன்படுத்திய கத்தரிக்காய் அடுத்த நாள் வராமல் ஒரு வாரம் கழித்து வருகின்ற போது சலிப்பு அகன்று விடுகின்றது. சுவையும் குன்றுவது இல்லை. இங்கே புலவியும் புலவி நுணுக்கமும் ஏற்படுத்துகின்ற தடை சில நாள்களைக் கடந்துவிடுகின்றபோது நுகர்ச்சி சலிப்பை ஏற்படுத்தாது.

இதனால்தான் திருவள்ளுவர் இதனை ஒரு கோட்பாடு போல வெளிப்படுத்துகின்றார். புலவர் ஏனையோர் புலவியை மட்டுமே கூறிச்சென்றிருக்க, வள்ளுவர் மட்டும் புலவி நுணுக்கத்தையும் வகுத்துக்காட்டுவது அஃது ஓர் நுகர்ச்சிக் கோட்பாடு என்பதை மெய்ப்பிக்கின்றது.

திருவள்ளுவரின் இக்கருதுகோளை நன்கு தெரிந்துகொண்ட பரிமேலழகர், பரிப்பெருமாள், மணக்குடவர் போன்றவர்கள் புலவி அதிகாரத்துள்வரும் குறட்பாக்களுக்கு உரை எழுதும்போது, பரத்தையை இணைத்து உரை எழுதுவது பொருத்தமற்றதாக உள்ளது. பரத்தமையை அடியோடு விலக்கச் சொன்ன தலைவனைப் பரத்தையரோடு தொடர்புடையவனாகக் காட்டுவது பொருந்தாது.

"ஊடி யவரை உணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று" (1303)

"அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்" (1304)

இக்குறட்பாக்களுக்குத் துறை வகுத்ததும் உரை வகுத்ததும் எள்ளி நகைக்கத்தக்கனவாக உள்ளன. உணர்ப்பு வயின் வாரா ஊடற்கண் தலைமகன் புலந்து கூறியவழி தோழி கூறியது என இருக்க வேண்டிய துறையைப் பரத்தையரிடத்து நின்றும் வந்த தலைமகனோடு தலைமகள் புலந்து சொல்லியது எனக் கூறுவது வள்ளுவ நெறிக்குக் கொள்ளி வைப்பது போலாம். இப்பாடல்களின் துறையும் உரையும் தாம் தடம்புரள்கின்றன என்றால் இன்னொரு குறளாகிய,

"ஊடலின் உண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொல் என்று" (1307)

என்ற குறட்பாவிற்கான உரையில் உரையாசிரியர் அனைவரும் ஒன்று போலவே குழப்புகின்றனர்.

'புணர்வது நீடுவது கொல்; அன்று கொல்' என்று கருதுவதனால் இன்பத்திற்கு இன்றியமையாத ஊடலின்கண்ணேயும் ஒரு துன்பம் நிகழும். - இது பரிமேலழகர் உரை. இதைத்தான் உரையாசிரியர் எல்லாரும் ஏற்றுக்கொண்டு பின்பாட்டுப் பாடுகின்றார்கள்.



"ஊடலின் உண்டாங்கோர் ஐயம் புணர்வது
நீடுவ தன்றுகொல் என்று"

இவ்வாறு பாடல் இருக்குமானால் நீடுவது கொல்? அன்று கொல்? என்றெல்லாம் பொருள்கொள்வது பொருந்தலாம். இங்கே பாடல் எவ்வாறு உள்ளது? ஊடலின் உண்டாங்கொல் துன்பம் என வரையறுக்கப்பட்டு விடுகின்றது. இவ்வாறு வரையறுக்கப்பட்ட பின் நீடுவது கொல்! அன்று கொல்! எனக் கூறுவது பொருந்தாது. ஏன் பொருந்தாது? நீடுவது கொல் என்று எண்ணியபோது துன்பமாக இருக்கும். அன்று கொல் என்று எண்ணியதும் துன்பம் அகன்று நம்பிக்கை வந்துவிடும். இப்படி இரண்டுங்கெட்டானாக இருப்பதை எவ்வாறு துன்பம் என்று துணிந்து கூறுவது?

உரையாசிரியர்களைக் குழப்புவது எது என்றால், 'நீடுவதன்று' என்பதிலுள்ள அன்று என்ற சொல்தான். அன்று என்பது எதிர்மறைப் பொருள் உணர்த்தும் சொல்லாக எல்லாரும் கருதுகின்றனர். இவ்வாறு கருதும்போது நீடுவது அன்று என்பது நீடாது என்று பொருள்பட்டுவிடுகின்றது. நீடாது என்றால் விரைவிலேயே புணர்வது நிகழ்ந்துவிடும் என்றாகிவிடுகிறது. இவ்வாறு ஆகுமானால் அது துன்பமாக முடியாது. இந்த முரண்பாடுகள் முட்டிக் கொள்வதால்தான் இந்தக் குழப்பத்திலிருந்து பாடலை விடுவிக்க நீடுவது கொல்? அன்று கொல்? என்று சாமர்த்தியமாகப் பொருள் உரைக்கின்றனர்.

உரையாசிரியர்கள் எல்லாரும் சிறந்த அறிஞர்கள் தாம். ஆனால் ஆனைக்கும் அடிசறுக்குதல் இயல்புதானே. அது சரி எல்லா ஆனைக்குமா அடி சறுக்கும் என்றால், முதல் யானை சறுக்கிய இடத்திலேயே எல்லா ஆனைகளும் சறுக்குவதைப் பார்த்தால் அதையும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும் போலும்.

அன்று எனும் சொல்லை எதிர்மறைப் பொருள் உணர்த்துவதாகக் கொள்ளாது, அசைநிலையாகத் தள்ள வேண்டும். தள்ளினால் என்னவாகும்? 'ஊடலின் கண்ணும் ஒரு துன்பம் உண்டு, புணர்தற்காம் காலம் நீடுவது கொல் என்று' வரும். இவ்வாறு கொண்டால் எந்தப்பிழையும் இல்லைதான். ஆனால் 'அன்று' என்றொரு அசைநிலை உண்டா? என்றொரு கேள்வி பிறக்கும்.

"மூவா முதலா உலகம் ஒரு மூன்றும் ஏத்தத்
தாவாத இன்பம் தலையாயது தன்னின் எய்தி
ஓவாது நின்றகுணத் தொண்ணிதிச் செல்வன் என்ப
தேவாதி தேவன் அவன் சேவடி சேர்தும் அன்றே"

சீவகசிந்தாமணி - 1

இதில் அவன் சேவடி சேர்தும் என்பதனோடு பாடல் முடிந்து விடுகின்றது. ஈற்றில் உள்ள 'அன்றே' என்பது என்ன? அன்றும் ஏயும் அசைநிலைகள் என்பார் உரை எழுதிய நச்சினார்க்கினியர். நீடுவது அன்று கொல் என்பதில் அன்று என்பதை அசைநிலையாக்கிப் பொருள் கூறலே பொருத்தமானது என்பதை அறிய வேண்டுகிறேன்.

ஊடலை ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் அவாவி நிற்கச் செய்யும் சிறந்த கருவி என்று கூறினாலும் அந்தக் கருவியைப் பயன் படுத்துவதில் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்கின்றார் திருவள்ளுவர்.

புலவி (ஊடல்) என்பது உணவுக்கு உப்பைப் போல. அது அளவாக இருக்கின்றபோது உணவுக்குச் சுவை கூட்டும். அது அதிகமானால் உணவையே குப்பையில் கொட்ட வேண்டி வரும் என்கின்றார். ஊடலும் இன்ப நுகர்ச்சிக்கு அளவாக அமைய வேண்டும். அப்பொழுது அது இன்பத்தைத் தருவதாக அமையும். மாறாக அவ்வூடல் அதிகமானால் இன்பத்தைத் துன்பமாக மாற்றி விடும் என்கின்றார்.

ஊடலை எங்கே தொடங்குவது? எங்கே முடித்துக் கொள்வது? என்பதில் இருபாலாரும் தெளிவாக இருத்தல் வேண்டும். முடிக்க வேண்டிய இடத்தில் முடித்துக் கொள்ளத் தவறினால் வாழ்க்கையை அது முடித்துவிடும். ஆம்! உப்பு மிகுதியான உணவைப் போல.

புலவி நுணுக்கத்தில் சிக்கல்கள் ஏதும் இன்றி இன்ப மிகுதிக்காக ஊடல் தொடங்கப்படுவதனால் அது பெரும்பாலும் அளவை மீறாமல் இருக்கும். ஆனால் புலவியுள் உண்மையான சிக்கலின் அடிப்படையில் ஊடல் எழுவதனால் கொஞ்சம் எல்லை மீறவும் கூடும். உணர்ப்பு வயின் வாரா ஊடல் என்பது புலவியுள் ஓரளவு இருக்கத்தான் செய்யும். இவ்வாறு அளவு மீறலைத் தோழி அல்லது தோழன் தலையிட்டு அதனைத் தணிவிப்பர்.



இங்கே இன்னுமோர் ஐயம் தோன்றக்கூடும். புலவியுள் பரத்தையரை வருவித்து உரை எழுதியது பொருந்தாது என்றாயே? புலவி நுணுக்கத்தில் 'கோட்டுப் பூச் சூடினும் காயும் ஒருத்தியைக் காட்டிய சூடினீர் என்று', 'தன்னை உணர்த்தினும் காயும்' என்னும் குறட்பாக்களில் பிற பெண்ணோடு தலைவனுக்குத் தொடர்பிருப்ப தாகத் தலைவி கூறுகின்றாளே! இது சரியா? என்று என்னைக் கேட்கலாம்.

புலவியுள் பேசுவது எல்லாம் உண்மையான பேச்சு. புலவி நுணுக்கத்தில் பேசுவன எல்லாம் இட்டுக்கட்டிய பொய்கள் என்பதை முன்னரே விளக்கியுள்ளேன். இங்குப் பேசப்படுவன எல்லாம் பொய்களே என்று அறிவித்துவிட்ட பிறகு அவற்றை உண்மை என்று எவ்வாறு எடுத்துக்கொள்வது?

## பரத்தமை எப்படி வந்தது?

பழந்தமிழர்களின் வாழ்வில் அன்பின் வழிப்பட்ட காதலைச் சந்தித்த நமக்கு அங்குக் காணப்படும் பரத்தமை முள்ளாகக் குத்துகின்றது. கட்கின் புதுமலர் முட்பயந்தாங்கு அன்பு வாழ்க்கைக்குள் பரத்தமை வன்பு வந்தது எவ்வாறு? மதிக்கண் மறுப்போல அன்பின் ஐந்திணைக்குள் பரத்தமை ஊடுருவி நிற்பது பளிச்சென்று புலப்படுவது மட்டுமன்று; கண்ணை உறுத்தவும் செய்கின்றது. ஊடற் காலத்தில் பரத்தமை கடியப்படுவது போலப் பேசப்பட்டாலும் பரத்தையரைத் தலைவியர் சிலர் 'எங்கையர்' என்று கொண்டாடுவது வியப்பாகத்தான் உள்ளது. பரத்தமைக்குச் சமூகத்தின் அனுமதி கிடைத்திருக்கும்போல்தான் தோன்றுகின்றது. சமூக ஒப்புதல் எப்படிக் கிடைத்தது?

சமூகம் தன் தேவையை வைத்தே எந்த விதியையும் இறுக்கியும் பிடிக்கும்; தளர்த்தியும் கொடுக்கும். இறுக்க வேண்டிய நேரத்தில் இறுக்காமலும் தளர்த்த வேண்டிய நேரத்தில் தளர்த்தாமலும் இருந்தால் அந்தச் சமூகம் அழிவை நோக்கித்தான் போக முடியும். சங்ககாலச் சமூகத்தினுள் பரத்தமையைக் கண்டும் காணாமலும் ஏற்க வேண்டிய ஒரு நெருக்கடியான காலம் வந்திருக்க வேண்டும். என்ன அந்த நெருக்கடியான காலம்.

சங்க காலச் சமூகத்தைக் கண்ணதாசன்

"அந்தி மலர்ந்தால் அகநானூறுதான்
பொழுது புலர்ந்தால் புறநானூறுதான்" - என்பார்.

வீர யுகத்தின் உச்சகட்டம் சங்ககாலம்தான் என்று சொன்னால் அதனை எல்லாரும் ஏற்றுக்கொள்ளவே செய்வார்கள். போர் மூளுமானால் அங்கே என்ன நிகழும்? அழிவுதான் நிகழும்; ஆம் உயிரழிவுதான் நிகழும். போருக்குச் செல்பவர்கள் யாராக இருப்பார்கள்? முதியவர்களாக இருக்க முடியுமா? முடியாதுதான். இளைஞர் களாகத்தான் இருப்பார்கள். அவர்கள் போரிலே மடிய நேர்ந்தால் வாழ்க்கையை இழப்பவர்கள் அவர்களைவிட இளைய வயதுடைய அவர்தம் மனைவியர்தாம். அக்காலத்தில் மறுமணம் செய்விக்கப் பட்டதாக எந்தக் குறிப்பையும் காண முடியவில்லை. அவ்விளம் பெண்கள் எல்லாம் கடுமையான கைம்மை நோன்பை மேற்கொள்ள வேண்டிய கடப்பாட்டிற்குள் தள்ளப்பட்டனர். கைம்மை வாழ்க்கை எப்படி இருந்தது?

பழைய சோற்றைப் பிழிந்தெடுத்துச் சுவையற்ற புளிக்கறியைத் துணைக்கறியாக வைத்துச் சாப்பிட வேண்டுமாம். பரற்கற்கள் நிரம்பிய தரையில் பாயில்லாமல் படுத்து உறங்க வேண்டுமாம். இஃது அந்நாளைய கைம்பெண்ணுக்குச் சமூகம் வழங்கிய கட்டுப்பாடு. உணவோ நாவைத் துன்புறுத்துகின்றது. தரையோ உடம்பைத் துன்புறுத்துகின்றது. இது மட்டும்தான் துன்பமா? இல்லையே. ஐம்புலன்களும் கடந்த காலத்தில் பெற்ற இன்பம் இன்று கிடைக்காமையால் அனலாய்ப் பற்றி எரிக்கின்றனவே. உணவும் தரையும் புறப்பகையாய் நின்று போரிடுகின்றன. ஐம்புலன்களும் அகப்பகையாய் நின்று போரிடுகின்றன. அவ்வெளிய பெண்களால் என்ன செய்ய முடியும். எல்லாரும் பூதப் பாண்டியன் மனைவியாக முடியுமா? திலகவதியாராக முடியுமா? முடிந்தவர்கள் இறுதி வரை கைம்மை நோன்பை நோற்று மடிந்தார்கள். முடியாதவர்கள் கைம்மை ஒழுக்கத்திலிருந்து நழுவினர்; வழுவினர்; பரத்தையர் என்ற பட்டத்தைத் தாங்கி இழிந்தனர். இதுதானே சங்க காலச் சமூகத்தில் பரத்தையர் தோன்றிய வரலாறு. பரத்தமை என்பது எளிதில் தீர்க்க முடியாத சிக்கலாக இருந்தபோது சமூகம் அதையும் உள்வாங்கிக் கொண்டு அங்கீகரித்தது. இதன் காரணமாகவே இலக்கணங்களிலும் இலக்கியங்களிலும் அது இடம் பிடிக்கத் தொடங்கியது.



இப்பரத்தமை என்பது சமூகத்தின் ஒரு சிறிய பகுதியாக இருந்தபோது அதனால் பாரதூரமான விளைவுகள் ஏற்படாத காலம் வரை அதற்கு மிகப் பெரிய எதிர்ப்பு ஏதும் ஏற்படவில்லை. ஆனால் பரத்தமை நல்ல குடும்பங்களைச் சீரழிக்கத் தொடங்கியபோதுதான் சமூகம் விழித்துக்கொள்ள வேண்டிய நெருக்கடிக்கு ஆளாகியது. அறவோர்கள், புலவோர்கள் பரத்தமைக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கினர். திருவள்ளுவர் வெளிப்படையாகப் பரத்தமையைச் சாடினார். இந்தப் போராட்டத்திலேயே கொஞ்சகாலம் கடந்து விட்டது.

தமிழில் ஒரு விடுகதை:

"சந்திரனே சூரியனே மாமா
மந்திரிகுமாரி மாண்டு கிடக்கிறாள்." இது கேள்வி.

பதில் இப்படி வருகின்றது:

"அவ கிடக்கிறாள், அறுத்துக் கட்டுகிற சாதி,
கோட்டைக்குள்ளே போனால் குத்துப்பட்டுச் சாவாள்"

சந்திரனும் சூரியனும் மாமன்முறை என்றால் பூமிதான் தாயாக இருக்க வேண்டும். அப்பூமி பெற்ற மகள்தான் இங்கே மாண்டு கிடக்கிறாள். நெற்பயிர் அறுக்கப்பட்டு மாண்டு கிடக்கின்றாள். இது கேள்வி. இதற்குரிய பதில் என்ன?

(நெற்கதிர்) அரிவாளால் அறுக்கப்பட்டுக் கயிற்றால் கட்டப்படும் சாதிதானே அவள். அவள் கோட்டைக்குள்ளே (வீட்டுக்குள்ளே) போனால் உரலில் இட்டுக் குத்துப்பட்டுச் சாவாள் என்று பதில் வருகின்றது.

இதிலே நாம் காண வேண்டியது என்னவென்றால் 'அறுத்துக் கட்டுகிற சாதி' என்ற தொடரைத்தான். சங்க காலத்தில் அறுத்துக் கட்டாத சாதியாக இருந்த சமூகம் நெடுங்காலத்திற்கு பிறகு அறுத்துக் கட்டுகிற சாதியாக மாறியுள்ளது என்பதுதான். அப்பொழுது கூட எல்லாரும் அறுத்துக்கட்டுகிற சாதியாக மாறவில்லை. போர் சார்ந்த

வாழ்க்கையை உடைய சாதியினர் எல்லாரும் அறுத்துக்கட்டுதலை ஏற்றுக்கொண்டனர். போர்சாராத மேட்டுக்குடியினர் அறுத்துக் கட்டலை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை இன்றைய சமூக அமைப்பை வைத்தே கண்டுகொள்ளலாம்.

போர் சாராத வாழ்க்கையினர் வீட்டில் அகால மரணங்கள் நிகழ்வதில்லை; ஆனால் போர் சார்ந்த வாழ்க்கையினர் வீட்டில் அகால மரணங்கள் அடிக்கடி நிகழ்வது தவிர்க்க முடியாதது. அதனால்தான் போர் சார்ந்த வாழ்க்கையினர் தம் சமூகத்துள் பரத்தையர் பெருகுவதைத் தடுக்க ஒன்றுக்கும் மேற்பட்ட மகளிரைத் திருமணம் செய்யவும் மறுமணம் செய்யவும் அனுமதி வழங்கினர். போர் சார்ந்த சமூகம் தன்னை அழிவிலிருந்து தற்காத்துக் கொள்ளப் பலதார மணத்தையும் மறுமணத்தையும் ஏற்றுக்கொண்டு பரத்தமையைப் புறங்கண்டது. நெடுங்காலமாகப் பற்றித் தொடர்ந்த சீரழிவிற்கு ஒரு மாற்று மருந்தைக் கண்டு சமூக வாழ்வு தன்னை அழிவிலிருந்து காத்துக்கொண்டது.

### காதல் மயக்கமும் கருத்து மயக்கமும்

பழந்தமிழரின் காதல் வாழ்வை எதன் வழியாகக் கண்டோம்? இலக்கியத்தின் வழியாகத்தான். அந்த இலக்கியம் புலவனின் படைப்பு என்பதை நாம் மறக்கக் கூடாது. இவ்விலக்கியத்தினுள் கதை மாந்தர் பலரை நாம் சந்திக்கின்றோம். அம்மாந்தரின் உணர்ச்சிப் பேச்சு எல்லாம் புலவனால் படைக்கப்பட்டவைதாம். இலக்கிய மாந்தர்கள் வாயசைக்கும் வெறும் பொம்மைகளே. உண்மையில் பேசுவது யார் என்றால் பின்னணியில் இருக்கும் புலவனே. எல்லாருக்காகவும் அவன்தான் பேசுகின்றான். அப்படி என்றால் இலக்கிய மாந்தரின் உணர்ச்சிகளை, அவர்தம் இயல்புகளை எல்லாம் அவன் உள்வாங்கிக் கொண்டே இருப்பான் என்பது போதரும்.

பாத்திரங்களும் புலவனும் எல்லா வகையாலும் ஒத்தே இருப்பர் பெரும்பாலும். மிக அரிதாகத் தன்னால் வடிவமைக்கப் பட்ட பாத்திரத்தின் இயல்பை மறந்து தன்னியல்பைப் பாத்திரத்தின் மீது புலவர்கள் ஏற்றிவிடுதலும் உண்டு. அவ்வாறு ஏற்றிவிடும் போது பாத்திரத்திற்கும் படைத்த புலவனுக்கும் சிறிய முரண் தோன்றும். அம்முரண் எளிதில் வெளியே தெரிவதில்லை. கூர்ந்து நோக்கினால் மட்டுமே தெரியும். இத்தகைய முரண்பாடு ஒன்றை



நாம் பார்க்கப் போகின்றோம். இங்கே எதற்காகப் பார்ப்பது என்று கேட்பீர்களேயானால் இது காதல் தொடர்பானது என்பதனால்தான்.

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரக் கோவலனும் கண்ணகியும் நிலா முற்றத்தில் அமர்ந்து இன்பவயப்பட்டிருக்கின்றனர். கோவலன் காதல் மிகுதியால் பாடத் தொடங்குகிறான்:

> “மாசறு பொன்னே வலம்புரி முத்தே
> காசறு விரையே கரும்பே தேனே”

இவ்வடிகளைப் படிக்கும் போதே கோவலனின் மயக்கம் நன்றாகத் தெரிகின்றது. அது மட்டுமா? கோவலனின் மயக்கத்தைப் படைத்துக் காட்ட வந்த இளங்கோவடிகளின் மயக்கம் இன்னும் தெளிவாகத் தெரிகின்றது. மாசறு பொன்னே என்றது சரிதான். வலம்புரி முத்தே என்றதும் சரிதான். காசறு விரையே என்றதும் சரிதான். கரும்பே என்றது கூடச் சரிதான். தேனே என்று கண்ணகியை விளிக்கின்றானே இது சரியா? நிச்சயமாக இது சரியில்லை. எப்படி?

கோவலன் ஒரு சமணன். சமணர்கள் தேனை வெறுப்பவர்கள். தேன் உண்பதைப் பாவமாகக் கருதுபவர்கள். இதனையும் இளங்கோவடிகளே வேறு இடத்தில் கூறுகின்றார். கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் மூவரும் மதுரை செல்லும் வழியில் வயல்களின் வழியே நாம் செல்ல வேண்டா. அங்கே கரும்பிலே இருக்கின்ற தேன் கூடுகள் சிதைய அதனால் பெருகிற தேன் நீர் நிலைகளில் கலந்திருக்கும். நீர் வேட்கை காரணமாகத் தேன் கலந்த நீரை உண்ண நேரலாம். ஆகவே அவ்வழியே செல்ல வேண்டா. *(சிலம்பு : 10 : 82 - 85)* என்கின்றார். இதற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் ‘இதனாற் சொல்லியது நமது தரிசனத்துக் கடியப்பட்ட வாற்றால் தேன் உண்டலைப் பரிகரிக்க என்றதாம்’ என்பர். ஆக, சமணர்கள் தேன் உண்ணவும் மாட்டார்கள். சமய நூல்களில் கடியப் பட்டவற்றை மேற்கொள்ளவும் மாட்டார்கள் என்று அறிகின்றோம்.

தேன் உண்டலைப் பாவமென்று கருதும் கோவலன் கண்ணகியை நோக்கித் தேனே என்று கூறலாமா? அவன் கண்ணகியைப் பாவத்தின் வடிவமாகப் பார்க்கின்றானா? கடியப் பட்ட தேனைப்போல ‘நீயும் என்னால் கடியப்பட்டு விலக்குறுவாய்’ என்பதை முன்குறிப்பாக வெளிப்படுத்துகின்றானா? அப்படி

யெல்லாம் இருக்க வாய்ப்பில்லை. தேனே என்று சொல்லிய கோவலனின் சமண வேடம் இங்கே கலைந்து போவதைப் பார்க்கின்றோம். கோவலனின் இந்த வேடக் கலைவிற்கு யார் காரணம்? இளங்கோவடிகள்தானே கோவலனைத் தேனே என்று சொல்ல வைத்தவர். சமணனாகப் படைத்தவரும் அவர்தானே! ஆகக் கோவலனின் சமண வேடத்தைக் காப்பாற்ற முடியாமல் அதனைக் கலையச் செய்த குற்றம் இளங்கோவடிகளைச் சேருமேயல்லாமல் கோவலனைச் சேராது. எய்தவன் இருக்க அம்பை நோவது எதற்காக?

காதலால் மயங்கிய கோவலனைப் படைத்துக்காட்ட அதே காதல் மயக்க உணர்வினை இளங்கோவடிகளும் எய்தியே இருக்க வேண்டும். இவ்வாறு இளங்கோவடிகள் மயக்கமுற்ற நிலையில் தான் கோவலன் சமணன் என்பதை மறந்தவராய்த் தேனே என்று சொல்ல வைத்துவிடுகின்றார். இதிலிருந்து நமக்கு என்ன தெரிகின்றது தேன் கோவலனுக்குத்தான் விலக்கப்பட்ட பொருளேயன்றி, இளங்கோ அடிகளுக்கு அன்று என்று தெரிகின்றது. இளங்கோ அடிகளுக்குத் தேன் விலக்கில்லை என்றால் இளங்கோ அடிகள் சமணர் அல்லர் என்பது இன்னும் தெளிவாகத் தெரிகின்றது. இளங்கோ சமணராக இருந்தால் மறந்தும் கூடத் தேனே என்று சொல்லியிருக்க மாட்டார். ஒரு கவிஞனின் காதல் மயக்கம் அவனைப் பற்றிய மறை பொருளை வெளிப்படுத்திவிடுகின்றது.

இளங்கோவடிகள் குணவாயில் கோட்டத்தில் தங்கியிருந்தார் என்பதைக் கொண்டும் அடிகள் என்ற பெயரைக் கொண்டிருந்தார் என்பதைக் கொண்டும் அவர் சமணரே எனச் சாதித்தவர்களுக்கு இத்தேன் ஒரு பின்னடைவை ஏற்படுத்தவே செய்யும். அவர் சமணர் அல்லர் என்பதை இத்தேன் உறுதிப்படுத்துகின்றது.

அது சரி! இச்சிலப்பதிகார நிகழ்ச்சி பழந்தமிழர் காதலின் சிறப்பைப் பற்றி ஏதும் கூறாதபோது இங்கே அதை ஏன் விரித்துக் கூறவேண்டும் என்று கேட்கலாம். காதல் எவ்வளவு வலிமையானது என்பதைக் காட்டவும் அது படைப்பாளியையே இடறவைக்கும் ஆற்றலை உடையது என்பதை எடுத்துக்காட்டவுமே இங்கே விவரித்தேன். அந்த இடறல் ஒரு புதிய உண்மையை - இளங்கோ சமணர் அல்லர் என்ற உண்மையை இங்கே விளக்குவதனாலும் விவரித்தேன் என்று கூறலாம்.



## முடிவுரை

பழந்தமிழகத்தில் காதல் தோல்விகள், காதலித்துக் கைவிடுதல் போன்ற நிகழ்ச்சிகள் ஏதும் இல்லையா? என்றொரு கேள்வி பிறக்கக்கூடும். அவையெல்லாம் இருந்திருக்கும் என்பதை அங்கொன்றும் இங்கொன்றுமாக வெளிப்படும் செய்திகள் குறிப்பாகத் தெரிவிக்கவே செய்கின்றன. என்றாலும் இத்தகைய இருண்ட பகுதியை - மானுடச் சமூகம் புறந்தள்ள வேண்டிய பகுதியை அக்காலப் புலவர்கள் அம்பலத்தில் ஏற்றிக்காட்ட விரும்பவில்லை என்று தெரிகின்றது.

"காதல் அடைதல் உயிரியற்கை - அது
கட்டில் அகப்படும் தன்மையதோ?"

என்பார் பாரதிதாசன். உயிரின் இயற்கையாகிய அக்காதல் காலங்களால் தேய்வதில்லை; சமூக மாறுதல்களால் பின் வாங்குவதில்லை. கட்டுப்பாடுகளாலும் சட்டங்களாலும் அதனை முடக்க முடிவதில்லை. எல்லாவற்றையும் எதிர்கொண்டு வெற்றியை நோக்கி வீர நடையிடும் தன்மையது காதல் என்பதனால்தான் பாரதியார்,

"காதலினால் மானுடர்க்குக் கலவி உண்டாம்
கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும்
காதலினால் மானுடர்க்குக் கவிதை உண்டாம்
கானமுண்டாம் சிற்பமுதற் கலைகள் உண்டாம்
ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே
அஃதொன்றே இவ்வுலகத் தலைமையின்பம்"

என்று கூறுகின்றார். பழந்தமிழர்களுக்கும் காதல்தான் தலைமை யின்பம்; இன்றைக்கும் அக்காதல்தான் தலைமையின்பம். எதிர்கால மானுடச் சமூகத்திற்கும் காதல்தான் தலைமை இன்பம் என்பதை அறிகின்றோம்.